



Signature Not Verified
Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2025.10.10 20:50:29

# குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமம்,

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், பெருமாள்புரம் விரிவாக்க அபிவிருத்தி திட்ட எண். 11, குலவணிகர்புரம் கிராமம், சர்வே எண் : 1086பாகம், நகர வார்டு எண்.BP, பிளாக்-39, நகர அளவை எண். 15/3-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம் .

அளவு : 1:400
இணையதள விண்ணப்ப எண் : D9TPYUFK/2025/TCP

கோரியமனைகள் : 19

ஒதுக்கியமனைகள் : 19

**குறிப்பு:-**

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு : 3642.00 ச.மீ (0.89ஏக்கர்)

உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 1230.89 ச.மீ

மீதமுள்ள இடத்தின் பரப்பு : 2411.11 ச.மீ

மனைப்பிரிவு இடத்தின் எல்கை :

நிலையிலுள்ள சாலை :

## பொது ஒதுக்கிடு:-

(I) தானப்பத்திரம் எண்: 8369/2025 நாள்: 06.09.2025 மூலம் ஆணையாளர் திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்

1. உத்தேச மனைப்பிரிவு சாலை, மற்றும் மூலை முடக்கு : 1230.89 ச.மீ
2. பூங்கா பரப்பு : 241.76 ச.மீ(10.02%)
3. (A) பொது உபயோகம் : 15.17 ச.மீ (0.63%)

(II) தானப்பத்திரம் எண்: 8368/2025 நாள்: 06.09.2025 மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யபட்ட பகுதி.

4. (B) மின்வாரியம் (TANGEDCO) : 29.70 ச.மீ (1.23%)

**நிபந்தனைகள்**

1. அரசாணை நிலை எண் : 134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 20.09.2002-மற்றும் அரசாணை எண் : 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020-ன் படி நில உரிமம் குறித்து திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் சாலைகள் பூங்கா மற்றும் திறவிடம் ஆகியவற்றின் நிலப்பரப்பினை திருநெல்வேலி மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

2. இம்மனைப்பிரிவுக்கு மாநகராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் ஆணையாளர் திருநெல்வேலி மாநகராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.

4. நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 38ன் கீழ் நீக்கம் செய்யபட்ட திட்ட சாலை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD) NO. 12310/2024. நாள்:13.06.2024மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடிதம் எண். 4129/2024/திலிமா3 நாள்:27.03.2025 பரப்பு: 1753.31ச.மீ

5.மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை மாநகராட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறையின் மூலம் உட்பிரிவு செய்து அதற்க்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே மாநகராட்சியால் மனைபிரிவிற்க்கு இறுதி ஒப்புதல் வழங்கபட வேண்டும்.

6. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6'X4' என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.

7. இம்மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

ம.வ/தி.உ.தி.கு எண்: **SWP/106/2025**
தி.அ/ம.வ/தி.உ.தி.கு எண்:**SWP/144/2025**

வ ↑

உறுப்பினர் செயலர்/ இணை இயக்குநர்
திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி